மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட பரிசீலனை எதுவும் அரசிடம் தற்போது இல்லை.

திரு. செ. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தில் செங்குன்றத்தில் திறந்தவெளிச் சிறைச்சாலை அமைக்கும் வேலை முடிந்து விட்டதா? எந்த வருடம் சென்னையிலிருந்து அது மாற்றப்பட இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, செங்குன்றம் பகுதிக்கு வருகிற சிறைச்சாலை திறந்த வெளிச் சிறைச்சாலை அல்ல. சென்னையில் உள்ள மையச் சிறைச்சாலை மிக்க நவீன வசதிகள் அதிகமாக இருக்கக்கூடிய அளவிற்கு இந்தியாவிலேயே முன் உதாரணமாக இருக்கக்கூடிய சிறைச்சாலையாக அங்கு கிட்டத்தட்ட ஆறு கோடி ரூபாய்ச் செலவில் இது அமைக்கப்படுகிறது. வேலை முடியும் தருவாயில் இருக்கிறது. இன்னும் சில மாதங்களில் இது மாற்றப்படும். செங்கை மாவட்டத்தில் திறந்தவெளிச் சிறைச்சாலை வேங்கடமங்கலம் என்ற பகுதியில் அமைக்க அரசாங்கம் திட்டம் வைத்திருக்கிறது.

நெல்லிக்குப்பத்தில் சப்-மாஜிஸ்டிரேட் கோர்ட்.

690—(*வினா எண். 5222) திரு. துரை அன்பரசன்: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லிக்குப்பத்தில் சப்-மாஜிஸ்டிரேட் கோர்ட் ஒன்று ஏற்படுத்தும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: நெல்லிக்குப்பத்தில் சப் 'மாஜிஸ்டிரேட் கோர்ட் அமைப்பதற்கான விண்ணப்பங்கள் உயர்நீதி மன்றத்திடமிருந்தோ, வழக்குரைஞர் சங்கத்திடமிருந்தோ அல்லது பொதுமக்களிடமிருந்தோ வரவில்லை. அவ்விதம் வரும்பொழுது நிதி நிலைமைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

சத்துணவுக் கூடங்களுக்குச் சூரிய அடுப்புகள்.

691—(*வினா எண். 5443) திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு சத்துணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்துணவுக்கூடங்களில் '' சூரிய அடுப்பு '' மூலம் சமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இம்முறை எப்பொழுது மேற்கொள்ளப்படும்?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : (அ) ஆம்.

(ஆ) இத்திட்டம் பரீட்சார்த்தமாக மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 10 மையங்களில் 1985ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15ஆம் நாள் முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு எவ்வளவு செலவாகிறது? விறகைப் பயன்படுத்துவதற்கும் சூரியஒளி அடுப்பைப் பயன்படுத்துவதற்கும் ஏதாவது மாறுபாடு உண்டா? இதற்கு மைய அரசு ஏதாவது மானியம் வழங்குகிற நடவடிக்கைகள் இருக்கின்றனவா என்பதையும் இந்த முறை இலாபகரமானதாக இருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட விவரங்களை அறிவதற்காகத்தான் தற்போது ஆய்வு நடைபெற்று வருகிறது. குறைந்தபட்சம் ஆறு மாதகாலம் அந்த ஆய்வை நடத்தியதற்குப் பிறகுதான் அதுபற்றி ஒரு முடிவு எடுக்கப்படும்.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரீட்சார்த்தமாக ஒரு மாவட்டத்தில் ஒரு ஒன்றியத்தில் பத்து மையங்கள் என்று சொன்னார்கள். அது ஆங்காங்கிருக்கிற எல்லா மாவட்டங்களிலும் எல்லா ஒன்றியங்களிலுமா அல்லது குறிப்பிட்ட ஒன்றியங்களில் இந்த முறை நடைமுறைப் படுத்தப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்ல கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனாலும் ஒரு இடத்தில் இதைப் பரீட்சார்த்தமாக ஆய்வு நடத்திப் பார்ப்பதின் மூலம்தான் நாம் ஒரு சுலபமான முடிவிற்கு வரமுடியும் என்பதால் மதுரை மாவட்டத்தில் இதைப் பரீட்சார்த்தமாக வைத்துக்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் அந்த எண்ணத்தை அரசு பரிசீலிக்கும்.

திரு. மு. இராமநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சூரிய அடுப்பு அமைக்கும் திட்டம் பரிசீலனையில் இருந்த போதிலும்கூட— சத்துணவுக் கூடங்களில் பச்சை விறகை, எரியாத விறகை உபயோகப்படுத்துவதால் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே இந்தச் சூரிய அடுப்பைக் கொடுப்பது சாத்தியமாகிறவரை காஸ் ஸிலிண்டர் சப்ளை செய்யப்படுமா? அப்படி அந்த எரிவாயு கொடுக்கக்கூடிய அளவிற்கு ஒரு புதிய உத்தரவை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா, பரிவுகாட்டுவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி காஸ் அடுப்பு வழங்குவது, குழந்தைகள் இருக்கிற இடத்தில் அவ்வளவு உசிதமானதல்ல. ஆகவே அதை வழங்குவது என்பது அரசாங்கத்தின் பரிசீலனையில் இல்லை.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறும்போது பரீட்சார்த்தமாக அதற்கு ஆறு மாத அவகாசம் தேவை என்றார்கள். 1985-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15-ம் நாளில் ஆரம்பிக்கப்பட்டது, இன்று 1986-ஆம் ஆண்டு மே திங்கள் 15-ம் நாளுக்கு வந்திருக்கிறோம். ஆறு மாத காலம் முடிந்துவிட்டது. இந்தப் பரீட்சார்த்த நிலை தீருவதற்கு இன்னும் காலம் தேவையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆறு மாத காலம் அந்தப் பத்து மையங்களில் வைத்து உபயோகித்த பிறகு அவர்கள் அவர்களது கருத்துக்களை வழங்குவார்கள். அதற்குப் பிறகு அந்தக் கருத்தை அதற்குரிய திறமை பெற்றவர்கள் ஆய்ந்ததற்குப் பிறகு சமூகநலத்துறை அதை ஆய்வு செய்ததற்குப் பிறகு அரசாங்கப் பரிசீலனைக்கு வரும். அதற்குப் பிறகுதான் அரசாங்கம் முடிவு எடுக்கும்.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுக் கூடங்களில் சூரிய அடுப்பு பயன்படுத்தப்படுவது சிக்கனப்படுத்துகிற நடவடிக்கையாக அமைகிறதா ? இப்போது விறகு விலையெல்லாம் ஏறிப்போயிருக்கிறது. உமி, தேங்காய் நார்த்தூள் இவற்றைப் பயன்படுத்தும் அடுப்புகள் தயார் செய்து அவற்றைப் பயன்படுத்தலாம் என்று கூறுகிறார்களே, அதை அரசு பரிசீலிக்குமா ? அப்படிப் பரிசீலிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி ஒரு அடுப்பு தயாரிக்கப்பட்டிருப்பதாக பல பேர்கள் விளம்பரம் செய்திருக்கிறார்கள். ஆனால் அதற்குத் தேவையான அளவிற்கு உமி, தேங்காய் நார்த்தூள் இவை கிடைக்குமா என்பதையும் பார்க்கவேண்டும். இவை, தமிழகத்தைத் தழுவிய பல இடங்களில் 66,000 மையங்கள் நடைபெற்று வருகின்றன. எல்லாயிடங்களிலும் போதிய அளவிற்கு உமி, தேங்காய் நார்த்தூள் கிடைக்குமா என்பதையும் பார்க்க வேண்டும். ஆகவே நமக்கு எல்லா சௌகரியங்களையும் தருகிற ஒரு அடுப்பபைத்தான் நாம் பயன்படுத்த முடியும்.

சத்துணவுக்குக் கூடுதல் நிதி.

692—(*வினா எண். 6488) திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு சத்துணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சத்துணவு மையங்களில் காய்கறி, விறகு போன்ற பொருள் வாங்க ஒரு மாணவனுக்கு வழங்கப்படும் 13 காசை, 20 காசாக உயர்த்திக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?